தமிழுண்டு தமிழ் மக்களுண்டு – நல்ல
தமிழுக்கு நாளும் செய்வோம் நல்ல தொண்டு

– புரட்சிக் கவிஞர்

# தமிழ்ப் பல்கலைக்கழகம்
## தஞ்சாவூர் 613 010
### தமிழ்நாடு, இந்தியா

பெருந்தகையீர்,

வணக்கம்.

தமிழிலக்கிய வளர்ச்சியில் ஈடுபாடும் படைப்புத் திறனும் வாய்ந்த தங்களுக்கு இக் கடிதத்தை வரைவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

மாமன்னன் இராசராசன் பெயரில் தமிழ்ப் படைப்பிலக்கியத்திற்கு இலட்சத்து ஓர் உரூபா (ரூ.1,00,001) பரிசொன்றைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் வழங்கவுள்ளது.

உலகில் வாழும் தமிழ்ப் படைப்பிலக்கிய ஆசிரியர்கள் அனைவரும் சாதி, மதம், ஆடவர், மகளிர், அகவை வேறுபாடின்றி இதிற் பங்கு பெறலாம். உலக இலக்கியப் பெருமிதத்தைத் தமிழிலக்கியம் பெறவும் படைப்பிலக்கிய உருவாக்கத்தில் புத்தெழுச்சியைத் தோற்றுவிக்கவும் இப் பரிசு உருவாக்கப் பெற்றது. தகுதியுடையோரைப் பரிந்துரைக்கும் முன்மொழிவுகளையும் எதிர்நோக்குகிறோம்.

பரிந்துரைகளைச் சீர்தூக்கிப் பின்னர் தேர்வுக்குழு பரிசுக்குரிய நூலைத் தேர்ந்தெடுக்கும். தங்களுடைய ஒத்துழைப்பும் துணையும் இக்குழுவின் செயற்பாட்டிற்குப் பெரிதும் தேவை.

நூல்களை முன் மொழிதற்குரிய பட்டிகை, பரிசுக்குரிய விதிகளுடன் இணைக்கப்பெற்றிருக்கிறது. குறித்த நாளுக்குள் பரிந்துரையை அனுப்பியுதவ வேண்டுகிறோம். பட்டிகை அனுப்பாவிட்டாலும், இம்முயற்சியில் ஈடுபட்டுள்ள நண்பர்கள் தட்டச்சிட்ட நகல்களில் தம் முன்மொழிவை அனுப்புமாறும் வேண்டலாம்.

பணி மிகுந்த தங்களுக்கு நேரம் கிட்டுவது அரிதெனினும், தமிழிலக்கிய வளர்ச்சியில் பேரார்வம் செலுத்தும் தங்கள் முன்மொழிவாலும், ஒத்துழைப்பாலும் இம் முயற்சியில் நாங்கள் வெற்றி பெறவியலும் என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு.

அன்புள்ள,

நாள்:

**பதிவாளர்**

## இராசராசன் பரிசு––சிறப்புக் கூறுகளும் விதிச் சுருக்கமும்

1. இப்பரிசுக்குத் தமிழ்ப் படைப்பிலக்கியவாணர்கள், உலகில் எங்கு வாழ்ந்தாலும் பங்குபெறலாம். 1.7.2007 முதல் 30.6.2008 ஆம் நாட்களுக்குள் வெளியாகியிருக்கும் நூல்களே கருதத்தக்கன.

2. நம்மோடு வாழ்ந்து மிளிரும் ஆசிரியர்களின் நூல்கள் மட்டுமே கருதப்பெறும்.

3. பெற்ற முன்மொழிவுகளை ஆய்ந்து, சிறந்த நூலைத் தேர்வுக்குழு தெரிவு செய்யும். தாங்களனுப்பும் முன்மொழிவு தேர்வுக் குழுவின் முடிவிற்குப் பெரிதும் துணை செய்யும்.

4. தேர்வுக்குழு ஒரு முகமாகப் பரிசுக்குப் பரிந்துரைத்த பின்னர், ஆசிரியர் இல்லெனில் நெருங்கிய உறவினர்க்கு இப் பரிசுத்தொகை வழங்கப்பெறும்.

5. ஒருமுறை பரிசுபெற்ற ஆசிரியர் மீண்டும் பரிசு பெறவியலாது. எல்லாத் தகுதிகளும் நிகராகவே அமையின் முந்தைய ஆண்டுகளில் பரிசு பெறாத ஒரு நாட்டின் நூல், நடப்பாண்டில் பரிசு பெறும் தகுதியைப் பெறும்.

6. தரமான நூல் அமையவில்லையெனக் குழு கருதினால் அந்த ஆண்டிற்குப் பரிசு வழங்கப் படமாட்டாது.

நண்பர்களுக்கும் இவ் வேண்டுகோளைத் தெரிவித்து முன்மொழியுமாறு வேண்டலாம்.

விரிவான விதிகளைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு எழுதிப் பெறலாம்.

# தமிழ்ப் பல்கலைக்கழகம்
**தஞ்சாவூர் 613 010**
**தமிழ்நாடு, இந்தியா**

நூல் பரிந்துரை..................................................

நாடு ..................................

பதிவு எண்:..........................

1. பரிந்துரையாளரின் பெயர், முகவரி : ..........................................................................................
..........................................................................................
..........................................................................................

மின்–அஞ்சல் ..........................................................................................

தொலை/செல் பேசி ..........................................................................................

2. பரிந்துரைக்கப் பெற்ற நூலாசிரியரின் பெயர், முகவரி ..........................................................................................
..........................................................................................
..........................................................................................

மின்–அஞ்சல் ..........................................................................................

தொலை/செல் பேசி ..........................................................................................

நூலைப் பற்றியும், நூலாசிரியரைப் பற்றியும் தாங்களறிந்த செய்திகள்

பிறந்த ஆண்டு : ..........................................................................................

கல்வித் தகுதி : ..........................................................................................

இப்போதைய பணி : ..........................................................................................

இலக்கிய வாழ்வு : ..........................................................................................

ஆசிரியரின் சிறப்பான வெளியீடுகள், அவற்றின் உருவங்கள் (செய்யுள், புதினம், நாடகம், சிறுகதை முதலியன)

..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................

பெற்ற விருதுகள் : ..........................................................................................
..........................................................................................

3. நூற் பெயர் : ..........................................................................................

4. நூல் வெளியான விவரக் குறிப்பு

நாடு ........................................ இலக்கிய உருவம் ..............................................

விலை .......................................... இதன் முதற் பதிப்பு ஆண்டு .............................

இப்போதுள்ள பதிப்பின் எண்ணிக்கை

5. வெளியீட்டாளரின் பெயர் .....................................................................................
முகவரி .....................................................................................
.....................................................................................
.....................................................................................
தொலை/செல் பேசி .....................................................................................

6. பரிந்துரைத்த நூலின் சிறப்புக் கூறுகளும், நாடு முழுவதும் பெற்ற மதிப்பீடும்
.....................................................................................
.....................................................................................
.....................................................................................
.....................................................................................

7. இந்நூலைப் பரிந்துரை செய்யும்போது, வேறுள்ள ஆசிரியர்களின் நூல்களும் தகுதியானவை என்று கருதினால் அவற்றைப் பற்றிய செய்திகள்
.....................................................................................
.....................................................................................
.....................................................................................
.....................................................................................

8. முன்னர் தாங்கள் பரிசுக்குப் பரிந்துரைத்த ஆசிரியர், நூல்கள் பற்றிய விவரம்
.....................................................................................
.....................................................................................
.....................................................................................
.....................................................................................

9. பரிந்துரைத்த நூலைப் பற்றி உலகளாவிய மதிப்பீட்டின் சால்பு
.....................................................................................
.....................................................................................
.....................................................................................
.....................................................................................

10. பரிந்துரைத்த நூலில் தாங்கள் காணும் குறைகளும், அவை காணப்படினும் எக்காரணத்தால் பரிந்துரைத்தீர்கள் என்ற விளக்கமும்

......................................................................................
......................................................................................
......................................................................................
......................................................................................

11. பரிந்துரைத்த நூல் பிறமொழிகளில் பெயர்க்கப் பெற்றுள்ளதாயின் அவ்விவரம்

......................................................................................
......................................................................................
......................................................................................

12. தங்கள் கருத்தில் இந்த நூல் தற்காலத் தமிழ் இலக்கியத் தகுதிப்பாட்டை மிகுவித்துள்ளதாகக் கருதுகிறீர்களா?

......................................................................................
......................................................................................
......................................................................................

13. தெரிவிக்க விரும்பும் பிற ......................................................................................
......................................................................................
......................................................................................
......................................................................................

நாள்: ஒப்பம்

குறிப்பு:

1. ஒவ்வொரு வினாவிலும் விடையெழுத இடக்குறைவு அமையுமாயின் தனித்தாளைப் பயன்படுத்துக. அந்நிலையில் வினா அமைந்த பக்கத்தை மறவாமல் குறிப்பிடுக. கேள்விப் பக்க எண், மறவாமல் குறிக்க. பரிசுக்கென ஆறு நூற் படிகளைப் பரிந்துரையாளரோ/பதிப்பகத்தாரோ/நூலாசிரியரோ அனுப்புதல் வேண்டும்.

2. பரிசு வேண்டிப் பதிப்பகத்தாரோ / நூலாசிரியரோ / பரிந்துரையாளரோ/ பரிந்துரையோ / நூலோ அனுப்பாது போயினும் சிறந்த நூலைப் பரிசுக்குத் தெரிவு செய்யத் தேர்வுக்குழு உரிமை பெற்றுள்ளது.

இந்தப்படியை நிறைவுசெய்து 17.09.2008 நாளுக்குள் குறித்த முகவரிக்கு அனுப்புக.

**பதிவாளர்**
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் 613 010
தமிழ்நாடு
இந்தியா

## தமிழ்ப் பல்கலைக்கழகம்
## தமிழ்ப் படைப்பிலக்கியத்திற்கு வழங்கும் பரிசு

**1. குறிக்கோள்**

உலக நாடுகள் பலவற்றிலும் வாழும் தமிழ் எழுத்தாளர்கள், படைப்பிலக்கிய முயற்சியில் முனைதற்கும், தமிழ் இலக்கியத்தின் தரம் உலக நிலையைப் பெறுதற்கும் தமிழ்ப் பல்கலைக்கழகம் ''இராசராசன் பரிசு'' என்ற பெயரில் ஆண்டுதோறும் பரிசு வழங்குவதற்காகத் திட்டம் நிறுவியுள்ளது.

பரிசுக்குரிய தேர்வைச் செய்தற்கு நிறுவப்படவுள்ள குழுக்கள் பலவும் கடைப்பிடிக்க வேண்டியவிதிகள் தொடர்ந்து குறிக்கப்படுகின்றன.

**2. பெயர்**

நூறாயிரத்து ஒரு வெண் பொற்காசுக்குக் குறையாத இப்பரிசை இராசராசன் பரிசு என்ற பெயரில் தஞ்சையில் நிலை பெற்றுள்ள தமிழ்ப் பல்கலைக்கழகம் ஆண்டுதோறும் தலைசிறந்த தமிழ் படைப்பிலக்கிய ஆசிரியருக்கு வழங்கும்.

**3. வரைவுரைகள்**

அ. ''பல்கலைக்கழகம்'' எனில் ''தமிழ்ப் பல்கலைக்கழகம்''

ஆ. ''ஆட்சிக் குழு'' எனில் ''தமிழ்ப் பல்கலைக்கழக ஆட்சிக் குழு''

இ. ''குழு'' எனில் ''தேர்வுக் குழு''

**4. தேர்வுக்குழு**

அ. தேர்வுக் குழுவில் குறைந்தது உறுப்பினர்கள் ஐவரும் கூடுதலாக உறுப்பினர்கள் எழுவரும் அமைய வேண்டும். அவர்களுள் ஒருவர் பல்கலைக்கழகவேந்தராலும் மற்றொருவர் இணைவேந்தராலும் துணைவேந்தர் நீங்கலாக ஏனைய உறுப்பினர்கள் ஆட்சிக் குழுவாலும் நியமனம் பெறுவர். உறுப்பினர்கள் எழுவருள் ஒருவர் மகளிராக இருத்தல் வேண்டும். துணைவேந்தர் அலுவல்முறைஉறுப்பினராகவும் குழுவின் ஒருங்கிணைப்பாளராகவும் இருப்பார். நாடார்ந்த புகழினரும் சான்றோர்களும் தமிழ்ப் படைப்பிலக்கியங்களின் நயத்தைத் தேர்ந்துணர்ந்து சீர்தூக்கும் திறமை படைத்தவர்களுமாக, உறுப்பினர்கள் அமைதல் வேண்டும்.

ஆ. ஒவ்வோர் ஆண்டும் பரிசுத் தொகை வழங்கிய நாளோடு தேர்வுக்குழு உறுப்பினர்களுடைய கால வரம்பு முடிவு பெறும். அலுவல் வழி உறுப்பினர்களுக்கு இவ்விதி பொருந்தாது.
உறுப்பினர்கள் மீண்டும் இரு முறை நியமனம் பெறத் (மொத்தம் மூன்று முறை) தகுதியுடையவர்கள்.

இ. உறுப்பினர் எவராவது தக்க காரணம் காட்டாமல் குழுக் கூட்டத்திற்கு இரு முறை வராவிட்டால் ஒருங்கிணைப்பாளர் அவரை நீக்குமாறு ஆட்சிக் குழுவுக்குப் பரிந்துரை செய்வார். உறுப்பினர் எவரேனும்

தாம் வரவியலாமைக்குத் தக்க காரணம் கூறினால் அதனைப் பொறுத்தற்கும் ஒருங்கிணைப்பாளர் பரிந்துரை செய்யலாம்.

ஈ. தேர்வுக் குழுவின் தலைவராக, துணைவேந்தரோ அவருடைய பேராளரோ ஏனைய உறுப்பினர்களின் ஒத்திசைவு பெற்று ஆட்சிக்குழுவால் நியமிக்கப்படுவர். இப் பதவிக்கு அலுவல் வழி உறுப்பினரை நியமித்தல் விலக்கப்படும். பரிசு, என்று வழங்கப்படுகின்றதோ அன்று குழுவின் தலைமைப் பதவியின் கால வரம்பும் முடிவுறும்.

உ. தான் நியமிக்கும் உறுப்பினர்களின் பட்டியலில் தேவைப்படும்போது மாற்றங்கள் செய்தற்கு ஆட்சிக் குழுவிற்கு அதிகாரம் உண்டு.

ஊ. பொதுவாகக் குழுக் கூட்டங்களுக்கு 15 நாள் முன்னறிவிப்புத் தேவை அவசரக் கூட்டங்களுக்கு 7 நாள்முன்னறிவிப்பு போதுமானது.

எ. உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பங்கினர் (பின்னமாயின் முழுமையாக்கப்படும்) வந்திருப்பின் கூட்டம் நடத்தற்குப் போதிய உறுப்பினர்கள் ஆவர்.

ஏ. சுற்றுக்கு விடுதல் வழி, தேர்வுக் குழு தேவைப்படுமானால், தீர்மானங்கள் செய்து கொள்ளலாம். ஆனால், பரிசுக்குரிய நூல்களைத் தேர்ந்தெடுத்தற்கு இந்த முறையைக் கையாளுதல் கூடாது. எப்பொழுதேனும் நிகர்மையான வாக்குகளை ஆய்வுப் பொருள் பெறுமானால் குழுவின் தலைவருக்கு இரண்டாம் வாக்குரிமையை அறுதி வாக்காகப் பயன்படுத்த உரிமை உண்டு.

ஐ. பரிந்துரைகளை ஒரு பாற் கோடாது சீர்தூக்கலும் பரிசுக்குரிய நூலை நேர்மையாக நடுவு நின்று தேர்ந்தெடுத்தலும் குழுவின் கடமையாகும்.

ஒ. பரிசு வழங்கும் நாளுக்கு முன்னர் இரு முறையாவது கூடி, முதற் கூட்டத்தில் பரிந்துரைகளைச் சீர் தூக்கியும் இரண்டாவது கூட்டத்தில் பரிசு பற்றித் தீர்மானம் செய்தும் குழு செயற்பட வேண்டும்.

ஒ. விதிகளையும் ஒழுங்காறுகளையும் பரிசின் அடிப்படைக் கொள்கைகளுக்கு ஏற்பத் திருத்துவதற்கும் பொருள் விளக்குதற்கும் ஆட்சிக் குழுவிற்கு முடிவான அதிகாரம் உண்டு.

**5. நூல்கள், அவற்றின் ஆசிரியர்கள் தகுதி**

அ. உலக நாடுகளில் வாழும் தமிழ் எழுத்தாளர் எவரும் இப் பரிசிற்கு விண்ணப்பம் செய்யத் தகுதியுடையவர் ஆவார்.

ஆ. வகுத்தமைக்கப்பட்ட விதிமுறைகளின்படி தலைசிறந்தது எனத் தேர்வு செய்யப்பெறும் அச்சிட்ட நூலின்

அடிப்படையில் பரிசு உறுதி செய்யப்பெறும். இந்த நூல், பரிசு வழங்குதற்கான அறிவிப்பில் குறிப்பிடப்படும் நாளுக்கு ஓராண்டிற்கு முன் வெளியாகியிருத்தல் வேண்டும். தரமுடைய நூல்கள் ஒன்றுக்கு மேற்பட்டிருப்பின், நூலின் ஆசிரியர் ஆற்றியுள்ள இலக்கியத் தொண்டு முழுவதையும், அவர் ஆக்கியுள்ள படைப்பிலக்கியம் அனைத்தையும் கணக்கிலெடுத்துச் சீர் தூக்கிப் பரிசுக்கான தீர்வு உறுதி செய்யப்படும்.

இ. ‘‘படைப்பிலக்கியம்’’ என்பதில், மனித குலத்தின் மாண்புசேர், வாழ்வுமுறைக் குறிக்கோள்களும், நிலைபேறுடைய கோட்பாடுகளும் முருகியல் பண்பும் சொல்லழகும் பொருளேற்றமும் ஒருங்கிணைந்து ஒளிரும் கவிதை, நாடகம், கற்பனைக்கதை (fiction), புதினம் (novel) சிறுகதைகள், கலையழகுடைய உரைநடை ஆகியன அடங்கும்.

**6. ஆய்வுக்குரிய பரிந்துரைகள்**

அ. இந்தியாவிலும், தமிழர்கள் பேரளவில் வாழும் உலக நாடுகள் எங்கும் உள்ள இலக்கியக் கழகங்கள், மொழித்துறைகள், பெயர் பெற்ற திறனாய்வாளர்கள், பொது நிறுவனங்கள், இலக்கிய ஆசிரியர்கள் முதலியோரிடமிருந்து தரமிகுந்த படைப்பிலக்கியங்களைப் பற்றிப் பரிந்துரை செய்யுமாறு தமிழ்ப் பல்கலைக்கழகம் கேட்க வேண்டும். வடிவமைத்த படிவங்களில் இப்பரிந்துரைகள் ஆறு நூற்படிகளுடன் பெறப்படவேண்டும்.

ஆ. எந்த நிறுவனமோ தனி மனிதரோ குறித்த படிவத்தைப் பயன்படுத்தாது வேறுவகையில், ஆனால், தேவையான அனைத்துச் செய்திகளையும் உள்ளடக்கி, ஒரு நூலைப் பரிந்துரை செய்தால், தேர்வுக்குழு அதனை ஆராயலாம். அவ்வாறு செய்யும்போது, அந்தக் குழு, தேர்வு முறைக்கான அளவைகள் அனைத்தையும் கடைப்பிடித்தல் வேண்டும்.

**7. தேர்வுக் குழு**

அ. நூல்களைத் தேர்வு செய்கையில் இரு நூல்கள் நிகர்மையான வாக்குகள் பெறும் நிலைமை எழுந்தால் பரிசுத் தொகை, அந் நூலாசிரியர்கள் இருவருக்கும் நிகரளவில் பதிர்ந்தளிக்கப்படும்.

ஆ. ஏதேனும் ஓராண்டில் பீடு மிக்க இப் பரிசினைப் பெறும் பெற்றிமையுடைய நூல் ஏதும் இல்லை எனத் தேர்வுக் குழுக் கருதினால் அந்த ஆண்டில் பரிசு வழங்க வேண்டாமெனக் குழு முடிவு செய்யலாம்.

இ. எல்லாத் தகுதிகளும் நிகரளவில் அமையுமானால் முன் ஆண்டு அல்லது ஆண்டுகளில் பரிசு பெறாத ஒரு நாட்டின் நூல், நடப்பாண்டில் பரிசு பெறும் தகுதியைப் பெறுதற்குரியது.

ஈ. பரிசு வேண்டிப் பதிப்பகத்தாரோ / நூலாசிரியரோ/ பரிந்துரையாளரோ/ பரிந்துரையோ /நூலோ அனுப்பாது போயினும் சிறந்த நூல் ஒன்றைப் பரிசுக்குத் தேர்ந்தெடுக்கத் தேர்வுக்குழு உரிமை பெற்றுள்ளது.

**8. ஆசிரியர் மறைவால் பரிசு வழங்கும் நிலை**

தேர்வுக்குழு ஒரு நூலுக்கோ, நூல்களுக்கோ பரிசு கொடுக்க முடிவு செய்த பின் நூலாசிரியர் மறைவால் நிலவும் சூழ்நிலையைச் சீர்தூக்கிப் பார்த்துப் பரிசுத் தொகையை நெருங்கிய உறவினர்க்கு வழங்குதல் குறித்துக் குழு முடிவு செய்யும்.

**9. ஆசிரியருக்கு ஒரு முறைதான் பரிசு பெறும் தகுதி**

அ. ஒருமுறை பரிசு பெற்ற ஆசிரியருக்கு இரண்டாவது முறை இப் பரிசு பெறும் ஏலுமை இல்லை.

ஆ. பரிசு பெறும் நூல் பற்றிய மதிப்புரைகள் கவனிக்கப்படவேண்டும்.

இ. தொடர்புடைய நூல் வேறு ஏதேனும் பரிசு பெற்றுள்ளதா எனக் காணவும் வேண்டும்.

**10. செயலுறு அதிகாரம்**

மேலே கண்ட விதிகள் எவ்வாறு இருப்பினும், விதிகளில் கூறப்பட்ட குழுக்கள், முறையாகச் செயலாற்றாத அல்லது செயலாற்றவியலாத நிலையெழுமானால், இப் பரிசளிப்பின் நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் வேண்டத்தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதிகாரம் பல்கலைக்கழகத்தின் ஆட்சிக் குழுவிற்கு உண்டு.

ஒம்/....

பதிவாளர்